நாள்: 04.11.2025
O.S. No. 04 / 2023
பெயர்: சாகுல் ஹமீது, த/பெ. முகம்மது இப்ராஹிம்
வா.சா.2

<u>**1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :-

என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் என்னுடன் சேர்த்து ஆறு நபர்கள் ஆவார்கள். எனது தந்தை முகம்மது இப்ராஹிமுடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் அபிப்கனி, அப்துல் மஜீது ஆகிய இருவர் ஆவார். அப்துல்மஜீத் ன் மனைவி தான் ஜெகபர் நாச்சியார் என்றாலும் அவர்களுக்கு இரண்டு மகன்கள் ஒரு மகள் என்றாலும் சரிதான். அப்துல் மகஜீதின் மகள்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அப்துல் மஜீதின் மகன்கள் யார் என்றால் பிரேம் நசீர், சாஜகான் ஆவார்கள். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு எனது சகோதரர் வழக்கறிஞருக்கு தகவல் கூறியபோது நான் இருந்தேன் என்றால் சரிதான். அப்துல் மஜீதின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காததற்கு சிறப்பு காரணம் உண்டா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் பட்டா எனது தகப்பனார் மற்றும் எனது சித்தப்பாவின் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் சொத்தில் புல எண் தெரியாமல் எவ்வாறு முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் எனது வழக்கறிஞர் கூறினார். தாவா சொத்தை எப்போது அளந்துபார்த்தேன் என்றால் பிரதிவாதி தான் அளந்துபார்த்தார் நான் அளந்து பார்க்கவில்லை. பிரதிவாதி யார் சொத்தை அளந்தார் என்றால் அவரது சொத்தை அளந்தார். பிரதிவாதி சொத்தை அளந்து எல்லைக்கற்களை பதித்தார் என்றால் சரியல்ல, குச்சிகளை தான் ஊன்றினார். அவ்வாறு எல்லைக்கற்கலை பதித்தபோது நான் பிடுங்கி எடுத்ததாக என் மீது குற்றவியல் வழக்கு எண் 26/2023 என்ற குற்ற எண்ணில் நன்னிலம் காவல் நிலையத்தாரால் பதியப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி பட்டாவை திருத்தியது தொடர்பாக வருவாய்த்துறை அலுவலர்களிடம் மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மூத்த சகோதரர் ஜிம்னார்கான் தற்போது சென்னையில் உள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.12/2014-ல் ஆஜரானவர் சென்னை வழக்கறிஞர் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரரிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. எனது சகோதரி சார்பாக அவ்வழக்கில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் இதுநாள் வரையில் காவல் நிலையத்தில் வழக்கு சொத்து தொடர்பாக புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. புல எண்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் விஸ்தீர அளவில் தான் பிரச்சனை என்றால் சரிதான். வழக்கு சொத்தை அளவீடு செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு ஆதாரமாக என்ன ஆவணம் வைத்துள்ளேன் என்றால் பட்டாவை வைத்துள்ளேன். அளவீடு செய்த போது எதற்காக தடுத்தேன் என்றால் அளவீடு செய்த போது வேறுபாடு காணப்பட்டதால் தடுத்தேன். வழக்கு சொத்தில் எனக்கு உரிமை ஆவணம் உண்டா என்றால் இல்லை அது பூர்வீக சொத்து. நான் ஏற்கனவே வாங்கிய

பட்டாவில் அளவீடு அதிகமாக உள்ளதால் பிரதிவாதி மேல்முறையீடு செய்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு மேல்முறையீடு செய்து அதில் உண்மை அளவுகளில் மாற்றி உத்தரவிட்டார்கள் என்றாலும் அதை தான் எதிர்த்து தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு 12/2014 பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் அதில் கட்சி நடத்தி தோற்ற பிறகு தற்போது பொய் கட்சி சொல்லி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல அந்த வழக்கை பற்றி எனக்கு 2022-ல் தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிடை சொத்தை பொறுத்து நாங்கள் மட்டுமே முழு உரிமை கோரமுடியாது அப்துல் மஜீது வாரிசுகளும் அதற்கு பாத்தியப்பட்டவர்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.182/13 ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 800 சதுர மீட்டர் ஆகும். எதன் அடிப்படையில் 800 சதுர மீட்டர் என்று கோருகிறேன் என்றால் பட்டாவின் அடிப்படையில் கோருகிறேன். சர்வே எண்.182/12 ல் உள்ள நிலத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 650 சதுர மீட்டர் ஆகும். அந்த அளவீடையும் பட்டாவின் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு புல எண்களை அளந்தது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வழக்கை தவறாக தாக்கல் செய்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரில்ல. வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.11.04 16:23:02 +0530